தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரக இணை இயக்குநர் (மேல்நிலைக்கல்வி) செயல்முறைகள்.

ந.க.எண்.000123/டபிள்யு3/இ2/2023, நாள். 3.02.2023

621

பொருள்– பள்ளிக் கல்வி – தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப் பணி – 2017–18, 2018–19 மற்றும் 2019–20– ஆம் ஆண்டுக்கான ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் வரலாறுப்பாட முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் – பணிநியமன ஆணை அளிக்கப்பட்டமை – முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் பொதுவான பணிவரன்முறை ஆணை வழங்குதல் – சார்பு.

பார்வை– 1. சென்னை–6, தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியக் கடிதம் ந.க.எண்.4235/ஆர்8/2018, நாள்.02.01.2020 மற்றும் நாள்.03.01.2020

2. சென்னை–6, பள்ளிக் கல்வி ஆணையரக இணை இயக்குநரின் (மேல்நிலைக் கல்வி) செயல்முறைகள், ந.க.எண்.06364/டபிள்யு3/இ2/2020, நாள்.09.02.2020

09 FEB 2023

------

2017–18, 2018–19 மற்றும் 2019–20 ஆம் ஆண்டில் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள வரலாறுப்பாட முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு பார்வை 1–ல் காணும் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நேரடி நியமனத்துக்காக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பார்வை 2–ல் காணும் இவ்வாணையரக செயல்முறைகள் மூலம் பணிஒதுக்கீடு வழங்கப்பட்டு சார்ந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மூலம் பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. சார்ந்த முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் பொதுவான பணிவரன்முறை ஆணை வழங்கப்படுகிறது. ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்யப்பட்டு நியமனம் செய்யப்பட்டுள்ள மேற்படி ஆசிரியர்களுக்கு தனித்தனியாக பணிவரன்முறை செய்ய வேண்டிய அவசியமில்லை எனவும் தெரிவிக்கலாகிறது.

சார்ந்த முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்கும் அலுவலர் முதன்மைக் கல்வி அலுவலர் என்பதால், அனைத்து கல்வித் தகுதிச் சான்றுகள் உண்மைத் தன்மை சரிப்பார்த்து பணிப்பதிவேட்டில்

பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரே தகுதிகாண் பருவம் முடித்தலுக்கான ஆணை வழங்கப்பட வேண்டும்.

இச்செயல்முறைகளின் நகல்களை தங்கள் ஆளுகையின் கீழ் உள்ள மேல்நிலைப் பள்ளித் தலைமையாசியர்களுக்கு அனுப்பி வைப்பதோடு சார்ந்த முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகளை மேற்கொள்ளும்படி சம்மந்தப்பட்ட மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறும் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணை இயக்குநர்(மேல்நிலைக் கல்வி)
3/2/23

3/2/23

பெறுநர்
முதன்மைக் கல்வி அலுவலர்கள் (மின்னஞ்சல் மூலமாக)
சார்ந்த முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் (உரிய வழியாக)